**மோட்டார் விபத்து கோருரிமை தீர்ப்பாயம், (சார்பு நீதிமன்றம்) செஞ்சி**

**எம். சி.ஓ.பி.எண். 292/2016** **நாள். 27.07.2022**

2022ம் ஆண்டு ஜுலை திங்கள் 27ம் நாள் 2ம் எதிர்மனுதாரர் தரப்பு 1ம் சாட்சியின் வாக்குமூலம் 1969ம் ஆண்டு உறுதிமொழி சட்டப்படி சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சிவசங்கரன் | தொழில் | |
| த. பெ./க.பெ. | கிருஷ்ணமூர்த்தி | சாதி | |
| கிராமம் | வேலூர் | மதம் | இந்து |
| வட்டம் | | வயது | 58 |

**எ..சா.1**

**முதல் விசாரணை**

நான் குடியாத்தம் மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக பணிபுரிந்து வருகிறேன். இவ்வழக்கின் சாட்சியிம் அளிப்பதற்காக என்னை வேலூர் மோட்டார் வாகன ஆய்வாளர் அனுப்பி வைத்துள்ளார். அதற்கான அனுமதி கடிதம் எனக்கு கொடுத்துள்ளார். இவ்வழக்கு விபத்தில் சம்பந்தப்பட்ட TN 23 BX 4461 என்ற ஆட்டோவின் உரிமத்தின் சான்றிட்ட நகலை எடுத்து வந்துள்ளேன். 16.06.2016 அன்று இவ்வழக்கு விபத்து நடந்த போது மேற்படி வாகனத்தின் பர்மிட் புதுப்பிக்கப்பட்டுள்ளது. மேற்படி வாகனம் திருப்பத்தூர் நகராட்சி யிலிருந்து 30 கி.மீ தூரத்துக்குள் இயக்க அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. இவ்வழக்கு விபத்து நடந்த திருப்பத்தூர் முதல் திருவண்ணாமலை மெயின் ரோட்டில் உள்ள நாகராஜன் பட்டி என்ற இடம் திருப்பத்தூர் பஸ் நிலையத்தில் இருந்து சுமார் 18 கி.மீ தூரம் இருக்கும். மோட்டார் வாகன ஆய்வாளர் சொன்னதன் அடிப்படையில் நான் 18 கி.மீ தூரம் இருக்கும் என்று கூறுகிறேன். ஆவணத்தின் அடிப்படையில் சொல்லவில்லை. திருப்பத்துரில் இருந்து விபத்து நடந்த நாகராஜன் பட்டி 45 கி.மீ துரம் இருக்கும் என்றாலும், நான் 18 கி.மீ தூரம் என்று தவறாக சொல்லுகிறேன் என்றால் சரியல்ல. **எனக்கு சாட்சியம் அளிக்க வழங்கப்பட்ட அனுமதி கடிதம், விபத்து ஏற்படுத்திய ஆட்டோவின் பர்மிட் சான்றிட்ட நகல் ஆகியவற்றை தாக்கல் செய்கிறேன். அவைகள் எ.த.சா.ஆ .1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

(மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் ஆஜராகி குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவித்தார்)